## டிசம்பர் – 28 – வியாழன்

### புனித மாசற்ற குழந்தைகள்

**ஆண்டவரின் பெயரே நமக்குத் துணை! திபா. 124:8**

**முதல் வாசகம் : 1 யோவான் 1 : 5 --- 2 : 2**

என் பிள்ளைகளே, நாங்கள் அவரிடமிருந்து கேட்டறிந்து உங்களுக்கு அறிவிக்கும் செய்தி இதுவே. கடவுள் ஒளியாய் இருக்கிறார் அவரிடம் இருள் என்பதே இல்லை. நாம் இருளில் நடந்து கொண்டு, அவருடன் நமக்கு நட்புறவு உண்டு என்போ மென்றால் நாம் பொய்யராவோம் உண்மைக்கேற்ப வாழாத வராவோம். மாறாக, அவர் ஒளியில் இருப்பதுபோல் நாம் ஒளியில் நடப்போமானால், ஒருவரோடு ஒருவர் நட்புறவு கொண்டிருப்போம். மேலும் அவர் மகனாகிய இயேசுவின் இரத்தம் எல்லாப் பாவத்தி னின்றும் நம்மைத் தூய்மைப்படுத்தும். ஆனால் பாவம் நம்மிடம் இல்லை என்போமென்றால் நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்வோம் உண்மையும் நம்மிடம் இராது. மாறாக நம் பாவங்களை நாம் ஒப்புக்கொள்வோமென்றால் கடவுள் நம் பாவங்களை மன்னித்து, குற்றம் அனைத்திலிருந்தும் நம்மைத் தூய்மைப்படுத்துவார். ஏனெனில் அவர் நம்பிக்கைக்குரியவர், நேர்மையுள்ளவர். நாம் பாவம் செய்யவில்லை என்போமென்றால் அவரைப் பொய்ய ராக்குவோம். அவருடைய வார்த்தை நம்மிடம் இல்லை என்றாகும். என் பிள்ளைகளே, நீங்கள் பாவம் செய்யாதிருக்க வேண்டும் என இதை நான் உங்களுக்கு எழுதுகிறேன் ஆயினும் ஒருவர் பாவம் செய்ய நேர்ந்தால் தந்தையிடம் பரிந்து பேசுபவர் ஒருவர் நமக்கு இருக்கிறார். நம் பாவங்களுக்குக் கழுவாய் அவரே நம் பாவங்க ளுக்கு மட்டும் அல்ல, அனைத்துலகின் பாவங்களுக்கும் கழுவாய் அவரே.

**பதில்பாடல் :** வேடன் கண்ணியிலிருந்து தப்பிப் பிழைத்த பறவை போல் ஆனோம்

**நற்செய்தி : மத்தேயு 2 : 13 - 18**

அவர்கள் திரும்பிச் சென்றபின் ஆண்டவருடைய தூதர் யோசேப்புக்குக் கனவில் தோன்றி, நீர் எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்துக்குத் தப்பி ஓடிச் செல்லும். நான் உமக்குச் சொல்லும்வரை அங்கேயே இரும். ஏனெனில், குழந்தையை ஏரோது கொல்வதற்காகத் தேடப் போகிறான் என்றார். யோசேப்பு எழுந்து, குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு, இரவிலேயே எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றார். ஏரோது இறக்கும்வரை அங்கேயே இருந்தார். இவ்வாறு, எகிப்திலிருந்து என் மகனை அழைத்து வந்தேன் என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறியது. ஞானிகள் தன்னை ஏமாற்றியதை ஏரோது கண்டு மிகுந்த சீற்றங் கொண்டான். அவன் அவர்களிடம் கருத்தாய்க் கேட்டறிந்த தற்கேற்பக் காலத்தைக் கணக்கிட்டுப் பெத்லகேமிலும் அதன் சுற்றுப்புறமெங்கும் ஆள்களை அனுப்பி இரண்டு வயதும் அதற்கு உட்பட்டவையுமான எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்றான். அப்பொழுது" ராமாவிலே ஒரு குரல் கேட்கிறது ஒரே புலம்பலும் பேரழுகையுமாய் இருக்கிறது் இராகேல் தன் குழந்தை களுக்காக அழுதுகொண்டிருக்கிறாள். ஆறுதல் பெற அவள் மறுக்கிறாள் ஏனெனில் அவள் குழந்தைகள் அவளோடு இல்லை என்று இறைவாக்கினர் எரேமியா உரைத்தது நிறைவேறியது.

**தியானம் :** இற்றைக்கு 2017 வருடங்களுக்கு முன்னர் "ஆள்களை அனுப்பி இரண்டு வயதும் அதற்கு உட்பட்டவையுமான எல்லா ஆண் குழந்தைகளையும் கொல்லக் கட்டளையிட ஏரோதனுக்கு எவ்வாறு மனம் வந்தது?. (மத்தேயு 2:16) மனித நேயமுள்ளவர்கள் மட்டுமல்ல மிருகங்களும் தமது குட்டிகளுக்கு ஒருவர் தீங்கு செய்ய முற்படும்போது கோபப்பட்டு ஆவேசமாக ஏதாவது செய்ய முற்படுவது இயற்கை. கடவுள் நம்பிக்கை என்ற கால்களது துணையோடு நடக்கத் தெரியாத மனிதன் "தனிமனித சுதந்திரம்" என்ற பாவக்கால்களால் நடப்பதே இவ்வாறான குரூரச்செயல்களுக்கு காரணமென தவறாது குறிப்பிடலாம். அப்படியாயின் மிருகத்தனமான சூழலில் வாழ்ந்த ஏரோதனுக்கும் இன்று மின் கணணி யுகத்தில் வாழத் துடிக்கும் எமக்கும் என்ன வேறுபாடுள்ளது? வேண்டாத கர்ப்பம் எனப்படும் கருச்சிதைவால் சட்டத்தின் அனுமதியோடு அனுதினமும் பல ஆயிரக்கணக்கான பச்சிளம் உயிர்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதனை யார்தான் தடுப்பது? அன்று ஏரோதன் தனது அரசைத் தக்கவைக்க செயற்பட்டது போன்றே, இன்றும் தமது ஆட்சி உரிமைகளைத் தக்கவைக்க ஆட்சியாளர்கள் கருச்சிதைவு எனப்படும் புதிய புதிய சட்டங்களை உருவாக்கி மனித இனத்தையே அழிவுப் பாதையில் கொண்டு செல்கின்றார்கள். இவ்வாறான செயலைக் கண்டிக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் தமது 17-07-2013 செய்தியில் "கருவில் உள்ள குழந்தைகள் மனித சமுதாயத்தில் வலுவற்றுக் காணப்படும் மக்களே. இறைவன் தன் உருவில் படைத்துள்ள மிக அற்புதமான படைப்புக்கள் என்பதை உணர்ந்து அவர்களுக்கு மிக உயர்ந்த மதிப்பு அளிக்கவேண்டும்" என்கின்றார். ஆதலால் ஆதியில் ஏரோதனது கொலை வெறியிலிருந்து காப்பாற்றப்பட்ட எங்களில் ஒருவராக எம்முடனே இருக்கின்ற வல்லவராம் "இம்மானுவேலர்" எமது பெலவீனத்தில் தமது பெலன் விளங்கச் செய்வார் என நம்புவோம். அதிகார வெறி மற்றும் சுயநலம் என்னும் கருத்துக்களால் அநியாயமாகப் படுகொலை செய்யப்படும் பச்சிளம் பாலகர்களுக்காக, குறிப்பாக தாய்மாரின் கருவறையிலேயே கல்லறைகளுக்கு அனுப்படும் மாசற்ற குழந்தைகளுக்காக விசேடமாக வேண்டுதல் செய்வோம். மண்ணுலக மாந்தரெல்லாம் விண்ணரசைப் புரிந்து கொள்ள மந்தை மேய் மனிதருக்கு நற்செய்தி அறிவித்தவரே நான் உம்மை ஆராதிக்கின்றேன் - ஆமென்